# பத்திரிக்கைச் செய்தி

**புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுத் திட்டத்தில் (NEEDS) விண்ணபித்து இளைஞர்கள் மற்றும் மகளிர் பயன்பெறலாம் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு வடநேரே,இ.ஆ.ப.,அவர்கள் தகவல்**

படித்த வேலை வாய்ப்பற்ற, முதல் தலைமுறையினரை தொழில் முனைவோராக்கும் பொருட்டு தமிழக அரசு புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுத் திட்டம் (நீட்ஸ்–NEEDS) என்ற திட்டத்தினை உருவாக்கியுள்ளது. 25% அரசு மானியத்துடன் பட்டம், பட்டயம், தொழிற்கல்வி மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனங்கள் மூலம் பெறப்பட்ட தொழில் பயிற்சி சான்றிதழ் பெற்ற இளைஞர்கள் மற்றும் மகளிர் இத்திட்டத்தின் கீழ் உடன் விண்ணப்பித்து பயன் பெறலாம்.

மேலும் புதியதொழில் முனைவோர் மற்றும் தொழில்நிறுவனங்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், முதலாம் தலைமுறை தொழில் முனைவோரை உருவாக்க கீழ்க்கண்ட திட்டப்படிகடன் உதவி மற்றும் மானியம் வழங்கப்படுகிறது.

**1. கடன் திட்டம் :**

இத்திட்டத்தில் உற்பத்தி மற்றும் சேவை தொழில்களுக்கு குறைந்தபட்சமாக ரூ.10.00 இலட்சம் முதல் அதிகபட்சமாக ரூ.5 கோடி வரை தேசியமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம் மூலம் 25% மான்யத்துடன் (அதிகபட்சமாக ரூ.50 இலட்சம்) நிதியுதவி வழங்கப்படும். 3% பின்முனை வட்டி மான்யமும் வழங்கப்படும்.

**2. கடன் பெற தகுதிகள்:**

இத்திட்டத்தின் கீழ்கடன் பெற விண்ணப்பிக்கும் பொதுபிரிவினருக்கு 21 வயது முதல் 35 வயதுக்குள் இருக்க வேண்டும். சிறப்பு பிரிவினருக்கு (பட்டியல் இனத்தவர் / பிற்பட்ட வகுப்பினர்/ மிகவும் பிற்பட்ட வகுப்பினர்/ சிறுபான்மைனர்/ திருநங்கைகள்/ மாற்றுத் திறனாளிகள்/ மகளிர்/ மற்றும் முன்னாள் இராணுவத்தினர்) ஆகியோர்களுக்கு வயது 45க்குள் இருக்க வேண்டும்.

. கல்வித் தகுதியாக பட்டம், பட்டயம், ஐடிஐ அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் மூலம் தொழிற்சார் பயிற்சி படித்த இளைஞர்கள் மற்றும் மகளிர் இத்திட்டத்தின் கீழ் உடன் விண்ணப்பிக்கலாம்.

- மத்திய மற்றும் மாநில அரசுகளின் இதரதிட்டங்கள் மூலம் மானியத்துடன் கூடிய கடன் உதவி பெற்றவர்கள் இத்திட்டத்தின்கீழ் கடன் பெற தகுதியற்றர்கள் ஆவார்கள்.

மேலும், இத்திட்டத்தில் கனரக வாகனங்களான JCB, Excavator, Borewell Rigs, Concrete Mixer machine, cranes&Fork Lift Vehicles ஆகியவைகளை 25% அரசுமானியத்துடன் வங்கிகளில் கடன் பெற்றுபயன் பெறலாம்.

கோவிட் – 19 தொற்று பரவுவதை தடுக்கும் விதமாக 01.04.2021 முதல் 30.09.2021 வரை விண்ணப்பிக்கும் பயனாளிகள் நேர்முகத்தேர்வு இன்றி வங்கிகளுக்கு பரிந்துரை செய்யப்படுவதுடன் கட்டாய தொழில் முனைவோர் பயிற்சி பெறுவதிலிருந்தும் விலக்கு அளித்து அரசு ஆணையிட்டுள்ளது.

இந்த திட்டத்தில் விண்ணப்பம் செய்து பயன் பெற விரும்பும் பயனாளிகள் www.msmeonline.tn.gov.in/needs என்ற இணையதள முகவரியில் விண்ணப்பிக்க வேண்டும். மேலும் இத்திட்டத்தின் கீழ்விண்ணப்பித்து பயன்பெற பொதுமேலாளர், மாவட்ட தொழில் மையம், சத்தியமூர்த்தி நகர், தாந்தோணிமலை, கரூர் என்ற முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பிரசாந்த் மு வடநேரே,இ.ஆ.ப.,அவர்கள் கேட்டுக்கொள்கிறார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்**